**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW10 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 19.11.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. திவகரண் | Father Name | : | திரு. ருத்ரேகவுடா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் திப்பேயான அக்ராகரம் என்ற இடத்தில் வசிக்கிறேன். தானப்பன் அ.தி.மு.க கட்சியில் பொறுப்பு வகித்து வந்தார். எனக்கு நிலம் திப்பேயான அக்ராகரம் என் இடத்திலுள்ளது. போலீஸ் எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. தானப்பன் தம்பி பெயர் எனக்கு தெரியாது. தானப்பனுக்கு எத்தனை தம்பி என்ற விவரம் தெரியாது. கோபால் எந்த ஊர் என்ற விவரம் எனக்கு தெரியாது. சாட்சி புஷ்பாக என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின் போது 06.05.1997 ம் தேதி காலை ஏழு மணிக்கு சிட்டாபாளையம் தானப்பன் வீட்டிற்கு சென்ற போது நாராயணன் (எ) நாராயண சாமி தானப்பனிடம் நீ சொன்னபடி உன் தம்பியை கொலை செய்துவிட்டோம் பேசியை பணத்தை மீறி ரூ25,000/- கொடு என்று

கேட்டார் என்றும் அதற்கு தானப்பன் மீதி ரூ . 25,000/- கொடுத்துவிடுகிறேன் என்றார் என்றும் என்னை பார்த்ததும் பேச்சை நிறுத்தி விட்டார் என்றும் அதன் பிறகு தானப்பன் என்னை பார்த்து நிலம் விசியமாக பிறகு பேசிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார் என்றும் எனக்கு நாராயணனை நன்கு தெரியும் என்றும் அவர் பெங்களூரில் பல கொலை , கொள்ளை வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளார் என்றும் 02.05.1997 ல் தானப்பன் அவர் தம்பியை நாராயணன் அவர் கூட்டாளியை வைத்து பணம் கொடுத்து கொலை செய்துவிட்டார் என்று தெரியவந்தது என்றும் தானப்பனுக்கும் , தானப்பன் மனைவிக்கும், கோபாலுக்கும் கள்ள தொடர்பு இருந்தது என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி சாட்சிகளை மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**S/d..Thiru.V.Damodaran,**
**Additional District Judge,**
**Krishnagiri.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW 9(PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 19.11.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. காவேரியப்பா | Father Name | : | திரு. பரசுராமையா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தளியில் வசிக்கிறேன். சாட்சி புஷ்பா என்னுடைய மகள் , என் மருமகன் பெயர் கோபால், என் மகளுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். என் மருமகன் இராணுவத்தில் பணிபுரிந்து பணி ஓய்வுபெற்று , ஓசூரிலுள்ள அசோக் லைலாண்டில் பணிபுரிந்தார். சுமார் 20-25 வருடம் முன்பாக என் மருமகன் கோபால் இறந்துவிட்டதாக சொல்லி போலீசார் போட்டோ காண்பித்தார்கள். போட்டோவில் இருந்த அடையாளம் கோபால் உடையது . அதில் என்ன இருந்தது என்பது பற்றி தற்போது தெரியவில்லை. கோபால் எப்படி இறந்துபோய்விட்டார் என்ற விவரம் தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையின் போது நான் என் மருமகனை அண்ணன் மனைவி வீட்டில் இருக்கும்போது அவரிடம் கோபால் பேசிக்கொண்டிருந்ததை தவறாக நினைத்த தானப்பன் அவரது மனைவி அடிக்கடி துன்புருத்தி வந்தார் அதனால் மேற்படி தானப்பன் இரண்டு

நபர்களை வைத்து என் மருமகனை மோட்டார் சைகளில் ஏற்றி வந்து கொலை செய்திருப்பதாக சந்தேகப்படுகிறேன் என்றும் என் மருமகனுக்கு வேறு பகைவர்கள் யாருமில்லை என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி சாட்சியத்தை மாற்ற பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் அது தவறு.

**S/d..Thiru.V.Damodaran,**
**Additional District Judge,**
**Krishnagiri.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 264 of 2023**

Prosecution witness LW8 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 19.11.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி . புஷ்பா | Husband Name | : | திரு. கோபால் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தளியில் குடியிருக்கிறேன் , எனக்கு இரண்டு மகள்கள் , என் கணவர் பெயர் கோபால் . என் கணவர் இராணுவத்தில் பணிபுரிந்து வந்தார் . 1997 ல் அவர் இராணுவத்தில் ஓய்வு பெற்று தளிக்கு வந்தார் . அதன் பிறகு அசோக் லேலாண்டு கம்பெனியில் டிரைவராக பணிபுரிந்தார் . 1997 ம் வருடம் என் கணவர் வேலைக்கு போனார் திரும்ப வீட்டிற்கு வரவில்லை . 02.05.1997 ல் காலையில் என் கணவர் வேலைக்கு போனார் ஆனால் திரும்ப வரவில்லை. 3 நாட்கள் கழிந்து போலீசார் என்னை காவல் நிலையம் வரவைத்து என் கணவர் அணிந்திருந்த செயின் . மோதிரம், சட்டை, பேன்ட், செருப்பு ஆகியவற்றை காட்டினார்கள். அந்த பொருட்கள் பார்த்துவிட்டு அந்த பொருட்கள் என் கணவருடையது என் அடையாளம் காட்டினேன் . என் கணவரை கொலை செய்து விட்டதாக போலீசார் என்னிடம் கூறினார்கள் . ஏதற்காக அந்த கொலை நடந்தது என்று எனக்கு விவரம் தெரியாது.

அன்றைய தினம் விசாரித்த பிறகு போலீசார் மறுபடியும் எப்போது விசாரித்தார் என்று ஞாபகமில்லை . என் கணவரை யார் கொன்று விட்டார்கள் என்பது பற்றி தெரியாது . ஏதற்காக கொன்றார்கள் என்பது பற்றியும் எனக்கு தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலீஸ் விசாரணையின் போது என் கணவர் அவருடைய அண்ணன் மனைவி வீட்டில் இருக்கும்போது அவரிடம் கோபால் பேசிக்கொண்டிருந்ததை தவறாக நினைத்த தானப்பன் அவரது மனைவியை அடிக்கடி துன்புருத்தி வந்தார் அதனால் மேற்படி தானப்பன் இரண்டு நபர்களை வைத்து என் கணவரை மோட்டார் சைகளில் ஏற்றி வந்து கொலை செய்துவிட்டதாக சந்தேகப்படுகிறேன் என்றும் என் கணவருக்கு வேறு பகைவர்கள் யாருமில்லை என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காபாற்ற வேண்டி சாட்சியத்தை மாற்றி பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் அது தவறு.

**S/d..Thiru.V.Damodaran,**
**Additional District Judge,**
**Krishnagiri.**